04.07.2018
OS.1/14
வா.சா.2 குறுக்கு விசாரணை (9,10 பிரதிவாதிகள் சார்பாக)

2ம் வாதி என்னுடைய மாமனார். எனது மாமனார் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளித்தாரா என்று எனக்கு தெரியாது. நான் எனது மாமனார் ஆகியோர் ஒரே வீட்டில் இருந்தோமா என்றால் இல்லை. நான் தனியாக இருக்கிறேன். எனது மாமனார் வீட்டுக்கும் எனது வீட்டுக்கும் சுமார் 200அடி தூரம் இருக்கும். புட்டிரெட்டிப்பட்டி ரயில்வே நிலையம் அருகே வீடு என்றால் சரிதான். 2ம் வாதியின் நிலம் வேறு. என்னுடைய நிலம் வேறு. 2ம் வாதிக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 50,60 ஏக்கர் இருக்கும். 2ம் வாதியே விவசாயம் செய்து வருகிறார். கே.ஜி.முனிராஜ் எனக்கு என்ன உறவு என்றால் சகலை. எனது பெரிய மாமனாரின் மருமகன். கே.ஜி.முனிராஜியும், 1 வாதிகளும் ஒரே வீட்டில் இல்லை தனித்தனியாக உள்ளார்கள். விவசாயமும் தனித்தனி விவசாயம். ராமமூர்த்தி, சிவக்குமார், சுரேஸ்குமார், ஆகியோர் 1ம் பிரதிவாதியின் பிள்ளைகள். 1 முதல் 5 பிரதிவாதிகளுடன் நான் உறவாகத்தான் உள்ளேன். எனக்கு தெலுங்கு எழுதவும் படிக்கவும் தெரியாது. ராமுசெட்டியார், கோவிந்த செட்டியாருக்கு எவ்வளவு நிலம் இருந்தது என்றால் அந்த காலத்தில் 40,50ஏக்கர் இருந்தது. விற்றது போக உள்ள நிலம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து விசயமாக பலமுறை நான் கடத்தூர் காவல் நிலையம் சென்றுள்ளேன் என்றால் நான் செல்லவில்லை. பலமுறை கடத்தூர் காவல் நிலையம், தருமபுரி குற்றப்பிரிவு அலுவலகம் நான் கே.ஜி.முனிராஜியுடன் சென்றுள்ளேன் என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தின் முதன்மை விசாரணை வாக்குமூலத்தை வழக்கறிஞர் செந்தில்குமாரிடம் கையொப்பம் செய்தேன். 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு யார் வழக்கறிஞர் என்றால் தெரியாது. முனிராஜ் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் இல்லை. வழக்கின் தரப்பினர் யாரும் நீதிமன்றத்திற்கு வரவில்லை. எத்தனை ஏக்கர் நிலத்திற்கு வழக்கு நடைபெறுகிறது என்றால் எனக்கு தெரியாது. 7,8ஏக்கருக்கு வழக்கு நடப்பதாக கூறினார்கள். மேற்படி விவரத்தை வழக்கறிஞர் கூறினார். தாவா சொத்து நான் இருக்கும் இடத்திலிருந்து 2கி.மீ. தூரத்தில் உள்ளது. தாவா சொத்து அருகில் எனக்கு நிலம் ஏதும் இல்லை. வழக்கை நடத்துவதே நானும், 1ம் பிரதிவாதியும் தான் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு, பட்டா, சிட்டா, அடங்கல் யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் இன்று என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால் கரம்பாக உள்ளது. வாதிகள், 1 முதல் 5 பிரதிவாதிகள் என்னுடைய உறவினர் என்பதால் அவர்களுக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் வஞ்சக கூட்டு சதியால் வழக்கை நடத்துகிறோம் என்றால் சரியல்ல. செந்தில் குமார் வழக்கறிஞர் தற்போது நீதிமன்றத்தில் இல்லை.